# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 49 International Editor : MICHAEL. W. SMITH இதழ் - 49


## நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

யூதர்களின் ஆலோசனை சங்கத்தில் அதிகாரியாயிருந்த நிக்கொதேமு எனப்பட்ட ஒருவர் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து அவரைத் தேடினார். இவர் ஒரு பரிசேயர். மோசேயின் நியாயப் பிரமாணத் தின்படி வாழ்கின்றவர். இவர் யூத மத தலைமை அதிகாரியாய் இருப்பதினிமித்தம் இரகசியமாய் இயேசுவை சந்திக்க வந்தார். நிக்கொதேமோ இயேசுவை ரபி என்று அழைத்தார். இஸ்ரவேலில் யூத மத போதகர்களை மரியாதையுடன் அழைக்கும் வார்த்தை இது. அவர் இயேசுவை நோக்கி நீர் தேவனிடத்தில் இருந்து வராவிட்டால் இப்படிப்பட்ட அற்புதங்களை செய்யமாட்டீர் என்றார்.
பல நூற்றாண்டுகளாக எதிரொளித்துக் கொண்டே இருக்கும் இருதயங்களையும் மனதையும் இந்த உலகம் தரக்கூடாத மெய்யான சமாதானத்தினால் நிரப்பும் வார்த்தையை மறுமொழியாக இவ்வாறு கூறினார். மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காண மாட்டான். உண்மையான நீதி, சமாதானம், மனமகிழ்ச்சி, நித்திய வாழ்வு, தேவனுடைய ராஜ்யத்தின் வரங்கள் இவை யாவும் ஆவிக்குரிய பிறப்பு இன்றி சாத்தியமாகாது. 'மறுபடி பிறத்தல்' என்பது ஆவிக்குரிய மாற்றத்தை குறிப்பதாகும். அது மாம்சீக மாற்றம் அல்ல, தேவனுடைய அனுக்கிரகத்தினால் ஆத்துமாவில் வரும் மாற்றமே அது. பிறப்பு என்பது ஆரம்பம். இயற்கையான பிறப்பு, உலக வாழ்க்கை ஆரம்பத் திற்கு வித்திடுகிறது. அதுபோல ஆவிக்குரிய வாழ்வில் தேவனோடு நடப்பதே ஆவிக்குரிய பிறத்தல் ஆகும். ஆவிக்குரிய பிறப்பு என்பது, மதம் சார்ந்த ஐக்கியங்களில் இணைவதோ, நன்னடத்தை சீர்திருத்தங்களோ, நற்கிரியை களோ, பாரம்பரிய வழிபாடுகளில் பங்கெடுப்பதோ அல்ல. மறுபடியும் பிறத்தல் என்பது இயேசு கிறிஸ்துவின் செயல். எப்போது ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் தியாக மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் விசுவாசிக்கிறார்களோ அப்போதே குமாரனாம் இயேசுவின் வழியாக பாவமன்னிப்பாகிய மீட்பையும், தேவனோடு ஒப்புரவாகுதலையும் அருளியிருக்கிறார். கிறிஸ்துவின் தெய்வீக வல்லமையினால் மாத்திரமே, மறுபடி பிறத்தல் என்பது சாத்தியம். நம் உள்ளத்தில் புதிதான ஆவியை வைத்து, நம்மை கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக்குகிறார். பாவத்தின் வல்லமையினின்று விடுவிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த ஒருவர் கிறிஸ்துவின் சுதந்தரராயும், பரிசுத்த ஜனமாயும் வாழ முடிவது அவருடைய சொந்த பலத்தினால் அல்ல, தேவனுடைய வல்லமையால் சுயத்தை வென்று, மாற்றமடைந்து இருக்கிறார். இரட்சிப்பு என்பது ஆவிக்குரிய மறு பிறப்பை முற்றிலும் சார்ந்துள்ளது. இல்லை எனில் ஜனங்கள் தேவனோடு உள்ள ஐக்கியத்தில் தடைப்பட்டு ஆவிக்குரிய மரணத்தை அடைந்து விடுவார்கள். ஆசரிப்பு கூடாரம், தேவாலயம் என்று எங்கு சென்று வழிபட்டாலும் மறுபிறப்பு என்பதை அடைய முடியாது. மதத்தை பின்பற்றுகிற பலரும் இயேசு கூறிய மறுபிறப்பை அனுபவித்திருக்க முடியாது. 'ஒருவன் மறுபடியும் பிறவா விட்டால்' என்று இயேசு நிக்கொதேமுவிடம் கூறுகிறார். நித்திய வாழ்வை பெற விரும்பும் யாவரும் மதம், சமுதாய அந்தஸ்து, ஆவிக்குரிய பாரம்பரியம், தேசம், பாலினம், வயது, மதம் சார்ந்த ஐக்கியங்கள், எல்லாவற்றையும் கடந்து மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைப் பெற வேண்டும்.



**இரட்சிப்பு என்பது ஆவிக்குரிய மறு பிறப்பை முற்றிலும் சார்ந்துள்ளது. இல்லை எனில் ஜனங்கள் தேவனோடு உள்ள ஐக்கியத்தில் தடைப்பட்டு ஆவிக்குரிய மரணத்தை அடைந்து விடுவார்கள்.**


| தலையங்கம் | வேதபாடம் | துணை கட்டுரை | கேள்வி பதில் | உங்களுக்கு தெரியுமா? |
|---|---|---|---|---|
| | ஆவிக்குரிய பிறப்பு | மரணத்தினின்று ஜீவன் | இரட்சிப்புக்கான 5 வழிகள் | ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை<br>தேவபிள்ளைகளின் ஆசீர்வாதம் |
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

## வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

மேலும் கிறிஸ்துவை மேசியா என அறிந்து கொள்வது மாத்திரமே போதாது. மறுரூப அனுபவம் அவசியம். மறுபடி பிறத்தல் என்பது அவசியமானது. ஆத்துமா பாவ மன்னிப்பு பெற்று, அசுத்தம் நீங்கி பரிசுத்தமும் நீதியும் நிலை கொள்ளும் போது தான் உண்மையான ஆத்துமா மறு பிறப்பு அடையும்.இந்த ஆவிக்குரிய பிறப்பு என்பது மனிதனுடைய முயற்சியினால் சாத்தியமாகாது. தேவனுடைய கிரியையினாலே ஆவியிலே நடக்கும் ஒரு நிகழ்வுதான் அது. உலக பிரகாரமாக ஒரு குழந்தை தன் பெற்றோரின் சாயலில் இருக்கிறது. அதுபோல ஒருவன் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகும் போது அவனுடைய அடையாளம் மாற்றப்பட்டு தேவ புத்திரராக இருக்கிறார்கள். அவர்கள் மாம்சீக தன்மையிலாகிய பாவத்தின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு தெய்வீகத் தன்மையில் பங்கு உள்ளவர்களாகையால் பாவம் அவர்களை மேற்கொள்ள மாட்டாது.

ஆவிக்குரிய விழித்தெழுதல், இரண்டாவது சந்தர்ப்பம், மற்றும் நித்திய நம்பிக்கையின் வாக்குத்தத்தம்

யோவான் 3 : 6ல் இயேசு நிக்கொதேமுவிடம் மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாய் இருக்கும். ஆவினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்கிறார் இந்த மாம்சீக பிறப்பின் கிரியைகளை மாற்ற இன்னொரு பிறப்பு அவசியமாகிறது.

ஆகவே தான் அது தேவனுடைய ஆவியினாலே பிறக்க வேண்டிய அவசியத்தை நமக்கு தருகிறது. பலரும் இந்த ஆவிக்குரிய பிறப்பை நாட,மாம்சீக பாவத்துடனும், மதம் மற்றும் மனுஷீக கொள்கைகளுடனும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். எப்படி மாம்சீக பிறப்போ அதுபோல ஆவிக்குரிய பிறப்பு எல்லோருக்கும் அவசியமானது.

இறையியல் சார்ந்த கருத்துகளில் மறுபடி பிறத்தல் என்பது மிக முக்கியமானது. தேவனுடைய அழைப்பும் உன்னத அனுபவமும் இதில் அடங்கியிருக்கிறது. ஆவிக்குரிய விழித்தெழுதல், இரண்டாவது சந்தர்ப்பம், மற்றும் நித்திய நம்பிக்கையின் வாக்குத்தத்தம். நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா? நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்ளும் ஒரே வழி ஆவிக்குரிய பிறப்பு. தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் இருதயத்தில் அவரை நம்புங்கள் . உங்களுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்த இயேசுவில் இருக்கின்ற விடுதலையின் வல்லமையை விசுவாசியுங்கள். உங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி ஆவிக்குரிய வெறுமையை மாற்றி உங்கள் வாழ்வை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். இயேசுவை உங்கள் இரட்சகராக அழையுங்கள். இப்படி செய்வீர்களாகில் ஆவிக்குரிய உங்கள் பிறப்பும் ஆத்தும இரட்சிப்பும் பெற்று மரணத்தினின்று நீங்கி ஜீவனை அடைவீர்கள். ■



*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தீத்து 3:5

கர்த்தருடைய இரக்கத்தினாலும் அன்பினாலுமே நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம். ஆவிக்குரிய ஈவு வரங்களுக்காகவும், இரட்சிப்பிற்காகவும் நாம் போராட வேண்டியதில்லை. மாறாக அது இலவசம். இயேசு இந்த உலகிற்கு வந்து, தம்மையே தியாகபலியாக ஒப்புக் கொடுத்து பாவத்தினின்று நம்மை நீக்கி, நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்ளும் வழிகளை ஏற்படுத்தினார். இந்த உலகின் பொக்கிஷங்களையும், மகிழ்ச்சிகளையும் பார்க்கிலும் மேலான மகிமை உடையது இரட்சிப்பின் வரம்.

இந்த மாத இதழின் மையக்கருத்து " ஆவிக்குரிய பிறப்பு ". நடைமுறையில் எப்படி அது சாத்தியமாகும் என்பதை காணலாம். வேதத்தை தியானிக்க தியானிக்க மீண்டும் எளிமையையும், சத்தியத்தின் வல்லமையையும் நான் அறிந்து கொண்டேன். பல்வேறு சத்தியங்களில் காணப்படுகிற ஜனங்களுக்கு மத்தியில் மறுபடியும் பிறத்தல் என்பது தவறான புரிதலுக்கு வழிவகுக்கிறது. சில மத கோட்பாடுகளை நாம் பின்பற்றும் போது தான் கர்த்தரை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதை நிரூபிக்க முடியும். ஜனங்கள் நித்திய வாழ்வின் ஆனந்தத்தையும், வல்லமையையும் வாஞ்சிக்க வேண்டும்.

மனிதன் பாவக்கட்டுகளினின்று விடுதலை ஆக்கப்பட்டு தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமானால், ஆத்துமாவில் ஒரு மறுரூபமாகுதல் அவசியம். இரட்சிப்பு நம் சுய நீதியினால் சம்பாதிக்கப்பட்டது அல்ல, அது ஆவிக்குரிய மறுபிறப்பின் நிமித்தமே சாத்தியம். வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள காரியங்களை நாம் கடைபிடிப்பதனால் வருகின்ற நீதி, நம்மை மீட்படைய செய்யாது. ஆலயத்தில் பங்கு பெறுவது, ஐக்கியத்தில் உறுப்பினராய் இருப்பது, நன்னெறி நடத்தையில் வாழ்வது, ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, கொடுப்பது, மற்றவர்களுக்கு ஊழியம் செய்வது இவைகளின் நிமித்தம் இரட்சிப்பு வராது.

இரட்சிப்பு தேவனுடைய அனுக்கிரகம். மற்றவர்களுக்கு நம்மால் செய்ய முடியாத ஒரு செயல்தான் தேவனாகிய கர்த்தர் நமக்கு அருளும் மறுபிறப்பு. எல்லோருக்கும் இது தேவை. ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளரும் பிள்ளைகளுக்கு பரலோகத்தின் பிள்ளைகளாகும்படி ஆவிக்குரிய பிறப்பு அவசியமாகிறது. ஆவிக்குரிய பிறத்தல் மறுரூபமாக்குதலை கொண்டுவரும். இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இருதயம் கழுவப்பட்டு, ஆத்தும விடுதலை பெற்று, மரணம் என்கிற சாபத்திற்கு நீங்கலாக்கப்படுகிறோம்.

புது சிருஷ்டியாக்கப் படுகிறதினிமித்தம் மிகுந்த சமாதானம் உண்டாகும். கர்த்தரை துதியுங்கள்.மறுபடி பிறத்தல் என்பது நாம் முழுவதுமாக தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து வாழ்வை அர்ப்பணிக்கும் போது தேவ பிள்ளைகள் ஆகிறோம். வளர வளர நாமும் சில வேலைகளில் தவறுகிறோம். ஆயினும் பாவம் செய்வதில்லை. கர்த்தருடைய கிருபையிலே வளர்ந்து பெருகுகிறோம். நாம் புதிதாய் பிறந்துள்ளோம். வாழ்கிறோம், மறுரூபம் ஆக்கப்படுகிறோம், மன்னிக்கிறோம். ஆவிக்குரிய பிறப்பை குறித்து என் மனம் மகிழ்கிறது. ஆகிலும் சிலர் அதனை தம் சொந்த முயற்சியினால் அடைய எண்ணுவதை நினைக்கும் போது இருதயம் கலங்குகிறது. ஆவிக்குரிய பிறப்பின் நிமித்தம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிற நாம் நீதி, சமாதானம் மற்றும் உண்மையான மகிழ்ச்சியை காண முடியும். இழந்து போன வாழ்வை மீண்டும் கட்டி எழுப்பி மறுரூபமாக்கும் வாழ்வுக்குள் பிரவேசிக்க ஆவிக்குரிய பிறப்பு என்பது அவசியம். இதுவே என் ஜெபம்.


ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : ஆவிக்குரிய பிறப்பு

**வேத வாசிப்பு :**

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.யோவான் 3 : 3

**செய்திச் சுருக்கம் :**

எல்லா மனுஷரும் பாவம் செய்து மரணத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க ஆத்தும விழிப்புணர்வு அவசியம். அப்படிப்பட்ட மறுரூபம் ஆக்குதல்.தேவனுடைய வல்லமையால் மாத்திரமே சாத்தியம். இந்த ஆவிக்குரிய பிறப்பு ஆத்துமாவை பரிசுத்தமாக்கும். தெய்வீக அனுபவத்தில் பங்கடைவோம்.

### I.ஆவிக்குரிய மரணம்

A. ரோமர் 5 : 12 மரணம் எல்லாம் மனிதர்கள் மேலும் வரும்.

B.ரோமர் 3 : 23 – 24 எல்லோரும் பாவம் செய்கிறார்கள்

C.ரோமர் 6 : 23 பாவத்தின் சம்பளம் மரணம்

### II. குணப்படுதல்

A.அப்போ 3 : 19 மனந்திரும்பி குணப்படுங்கள்

B.மத் 18 : 3 மனந்திரும்பாவிட்டால்

### III. மறுபடி பிறத்தல்

A.யோவான் 3 : 1– 8 ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்

B.1 பேது 1 : 23 அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே

### IV.புது சிருஷ்டி

A.2 கொரி 5 : 17 கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி

B.ஏசா 1 : 18 பாவத்தினின்று கழுவப்பட்டீர்கள்

### V. மறுஜென்மம்

A. தீத்து 3 : 5 மறுஜென்ம முழுக்கு

B.எசேக் 36 : 24-27 புதிதான ஆவியை உங்கள் உள்ளத்திலே கொடுத்து

### VI.தேவனுடைய சித்தத்தினாலே ஆவியினாலே பிறந்தவர்கள்

A.யோவான் 1 : 12 –13 மாம்சத்தினால் அல்ல

B.எபேசி 2 : 8-10 இரட்சிப்பு தேவனுடைய ஈவு

### VII.மீட்பு

A. 1 பேது 1 : 18 – 19 அழிவுள்ள வஸ்துக்களினால் மீட்கப்படாமல்

B.கலா 6 : 15 விருத்தசேதனமும் ஒன்றுமில்லை விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை

### VIII. ஆவிக்குரிய மனிதன்

A.2 கொரி 4 : 16 உள்ளான மனுஷன் புதிதாக்கப்படுகிறான்

B.கொலோ 3 : 9 – 11 புதிதாக்கப்பட்ட புதிய மனுஷன்

### IX.திவ்ய சுபாவம்

A.2 பேது 1 : 3 – 4 திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவன்

B.எபேசி 4 : 24 மெய்யான பரிசுத்தத்தில் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷன்

### X.புது சிருஷ்டியின் அடையாளம்

A.1 யோவான் 3 : 9 பாவஞ்செய்யான்

B.1 யோவான் 5 : 4 உலகத்தை ஜெயிக்கும்

C.1 யோவான் 2 : 29 நீதியை செய்கிறவன்


### XI.கிறிஸ்துவில் வளருவதற்கான அடையாளங்கள்

A.எபேசி 3 : 14 – 17 முழுகுடும்பத்துக்கும் நாமகாரணர்

B.எபேசி 4 : 15 கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி

**முடிவு :**

அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் –எபேசி 2 : 1



# மரணத்தினின்று ஜீவன்

**தேவனுடைய சிருஷ்டிப்பிலே, தேவன் மனிதனை வெறும் மாம்சமும், இரத்தமுமாய் உண்டாக்காமல் அதனுடன் என்றும் அழியாத ஆத்துமாவையும் கொடுத்துள்ளார். ஆயினும் மனுக்குலமானது பாவத்திற்குட்பட்டது. அதினிமித்தம் மாம்சீக மற்றும் ஆவிக்குரிய மரணமாகிய சாபம் வெளிப்பட்டது .தேவன் தம் ஜனத்தை மரணத்தின் அதிகாரத்தினின்று நீக்கி, பாவத்தை கழுவி சுத்திகரிக்கும் மீட்புக்கான வழியை உண்டாக்கினார் – ஆவிக்குரிய பிறப்பு**

> **இயற்கையான பிறப்பைத் தாண்டி, நாம் அடையும் ஆவிக்குரிய பிறப்பு மனுஷனுடைய ஆத்துமாவில் மறுரூபத்தை உண்டாக்குவதால், அநீதத்திலும்,பாவச் சேற்றிலும் இருந்து நம்மைக் கழுவி பரிசுத்தப்படுத்தி தேவனுக்கு நேராக உள்ளம் மாற்றப்படும்.**

### பாவத்தில் மரணம்

பாவத்தினிமித்தம் தேவனுக்கும் மனுஷனுக்கும் பிரிவினை உண்டாயிற்று. மரணம் எல்லோர் மேலும் வந்தது. ரோம் 3 : 23 சொல்கிறது,எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,அவருடைய அன்பினால் பாவம், மரணம் என்பவைகளினின்று தாம் சிருஷ்டித்த ஜனங்கள் விடுவிக்கப்படும்படியான பிரமாணத்தை உண்டாக்கினார். அவர் தம்முடைய குமாரனாம் இயேசுவையும் பரிசுத்த ஆவியையும் இவ்வுலகிற்கு அனுப்பி ஆத்துமாவை மரணத்தின்று நீக்கி ஜீவனை பெறும்படி அனுப்பினார். இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர்3 : 24) . தேவனாகிய கர்த்தர் நமக்கு நித்திய ஜீவனை வாக்குபண்ணினதினிமித்தம் நம்பிக்கையை பெற்றுள்ளோம். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)

### சுவிசேஷத்தின் நம்பிக்கை

ஆழமான தேவ சத்தியம் யாதெனில் ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் (அப்3 : 19) .மனம் மாறுதல் என்பது முற்றிலுமான குணப்படுதல். ஒருவருடைய வாழ்க்கை, பழக்கவழக்கங்கள் தத்துவ கொள்கைகள் மற்றும் வழிகளில் பெரிய மாற்றத்தை காணலாம். இயேசு கூறுகிறார், நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 18 : 3)

### பாவத்திற்கு பரிகாரம்

பாவத்திற்கான விமோச்சனம் என்ன? ஒருவர் எவ்வாறு மாம்சீக இச்சையினின்று விடுபடக்கூடும்? அதற்கு தான் தேவை ஆவிக்குரிய பிறப்பு. இயேசு நிக்கொதேமுவிடம் யோவான் 3 : 3-6 ல் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான். மாம்சீகத்தில் பிறந்த எவனும் மாம்சத்திற்கு அடிமையா னவன். ஆவினாலே பிறந்த எவனும் ஆவியாயி ருக்கிறான். இயற்கையான பிறப்பைத் தாண்டி ஆவியினாலே பிறப்பது அவசியமாகிறது. ஏனெனில் ஆவியினாலே பிறக்கும்போது மனுஷன் மறுரூபமடைகிறான். இயற்கையான பிறப்பைபோல ஆவிக்குரிய பிறப்பும் ஆச்சரியமானது. தேவன் அசுத்தத்தை பரிசுத்தமாகவும், அநீதத்தை நீதியாகவும், பாவத்தை மாற்றி வாழவைக்க வல்லமையுள்ளவர் .

அப்போஸ்தலராகிய பேதுரு, 1 பேது 1 : 23 ல் அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. புதிய சிருஷ்டியாகிய நாம், அழிவுள்ள மரணத்தில் முடிவடையும். இந்த பூமிக்குரிய வித்தினாலே அல்ல, என்றும் அழியாத தேவனுடைய வார்த்தையினாலே நித்திய ஜீவனை அடையும்படி பிறந்துள்ளோம்.

### இரட்சிப்பின் ஆச்சரியம்

ஒருவர் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால், உடனே கர்த்தர் செய்யும் அற்புதம், அவருடைய வாழ்க்கையை மாற்றுவதே. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.2 கொரி 5 : 17 ஆவிக்குரிய பிறப்பினால் பாவக்கட்டுகள் உடைக்கப்பட்டு பரிசுத்தமும் குற்றமற்ற சுபாவமும் நம்மில் உண்டாகும் விசுவாசியான ஒருவர் பாவத்திலேயே வாழமாட்டார் . ஏனெனில் அவர் புது சிருஷ்டியானபடியினால் பாவத்தை மேற்கொள்ளும் வல்லமை பெற்றிருக்கிறார். ஏசாயா தீர்க்கதரிசி உரைக்கையிலே தேவன் நம்முடைய ஆத்துமாவை சித்தரிக்கிறார்.

### ஆவிக்குரிய பிறப்பு

இந்த ஆவிக்குரிய பிறப்பை வேகமாகவும் மறு ஜென்மம் அல்லது புது சிருஷ்டி எழுப்புதல் அல்லது மறுபிறப்பு என்கிறது.நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3 : 5). மீட்பின் முழுமையான திட்டம் பாவத்தினின்று கழுவப்பட்ட ஆத்துமா பரிசுத்த ஆவினால் நிரப்பப்பட வேண்டும். ஆத்துமா புதுசிருஷ்டி யாகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி இந்த அனுபவத்தைக் கூறுகையில், அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக்

கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்.அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங் களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன் (எசே 36 : 25-27) . கர்த்தருக்கே துதி உண்டாகட்டும். தேவன் அவருடைய இரத்தத்தினாலும் வார்த்தை என்னும் ஜலத்தினாலும் நம்மை சுத்திகரித்தார். பழைய கடினமான பாவ இருதயத்தை மாற்றி அவருடைய புதிதான ஆவியை உள்ளத்திலே வைத்திருக்கிறார். இந்த ஆவிக்குரிய பிறப்பு தேவனுடைய வழிகளில் நடந்து பரிசுத்த வாழ்க்கை வாழ வழிவகுக்கிறது.



**நாம் பலவீனமுள்ளவர் களாகவோ,பெலமுள்ள வர்களாகவோ இருந்தாலும், நம் ஆத்துமா மறுரூபமாக்கப்பட்டு விட்டால், நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கும் பாவங்கள் நம்மை மேற்கொள்ளாது பாதுகாக்கும் வல்லமையை பெறலாம்.**

### தேவனிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது

ஒருவர் ஆவிக்குரிய மறுரூபமாக்கப்படுதலை அடைய முழுமையாக தம் உள்ளத்தை திறந்து தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும். பாவ வாழ்க்கையினின்று விடுவிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப் படுதல் என்பது ஒருவருடைய சொந்த முயற்சியினால் கூடாது. உண்மையான ஆவிக்குரிய பிறப்பு என்பது தேவனாலேயே சாத்தியம். பாரம்பரியமோ, தேசமோ அல்லது வேறு எவ்விதத்தினாலோ அது சாத்தியமல்ல. யோவான் 1 : 12 – 13 சொல்கிறது அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர் களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபேசி 2 : 8 - 9).

### நம்முடைய கிரியைகளினால் அல்ல

பலரும், மீட்பையும் ஆவிக்குரிய வாழ்வையும் செயல்பாடுகள், நற்கிரியைகள் ,நன்னடத்தை மற்றும் மதத்தின் மூலம் தேடிக் கொண்டிருக்கின்றனர். உண்மை என்னவெனில் சத்திய வாழ்வும் பரிசுத்தமும், தேவனுடைய அனுக்கிரகத்தினால்தான் கிடைக்கும். உங்கள் முன்னோர்களால் பாரம்பரிய மாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தை யினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியி னாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேது 1 : 18-19) . சடங்காச்சாரம், பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், நெறிமுறைகளும், கோட்பாடுகளும் தேவனை நாம் ஏற்றுக் கொண்டதன் அடையாளம் அல்ல. மீட்பு என்பது மனுக்குலத்தின் முயற்சிக்கு அப்பாற்பட்டது. சிருஷ்டிப்பின் நாயக ருடைய வல்லமையினாலே ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்வு தொடங்கப்படுகிறது.

### ஆவிக்குரிய மனுஷன்

நாம் மாம்சீகமாகவும், ஆவியாகவும் இருக்கிறோம். வெளிப்புற மனிதன் நோயினாலும், மரணத்தி னாலும் வாதிக்கப்பட்டாலும் உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறான் (2 கொரி 4 : 16) பவுல் ஆவிக்குரிய மனுஷனை குறித்து கொலோ 3 : 9-10 ல் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே என்கிறார்.

### திவ்விய சுபாவத்தில் பங்கடைவோம்

பாவ வாழ்க்கையில் இருக்கும் மனிதர்களை மீட்டு பரிசுத்த வாழ்வின் நிலைக்கு கொண்டு வருவதே இரட்சிப்பின் நோக்கம்.தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (2 பேது 1 : 3-4). மனுஷீக சுபாவங்களான ஆசைகளும் கோபங்களும் காணப்பட்டாலும் நல்லொழுக்கமான நீதிக்குரிய மாற்றங்களை உணர முடியும் .மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசி 4 : 24)

### புது சிருஷ்டியின் அடையாளம்

ஜென்ம சுபாவங்களில் ஒவ்வொருவருக்கும் பலம் மற்றும் பலவீனங்கள் உண்டு. ஒருமுறை நம் ஆத்துமா மறுரூபமாக்கப்பட்டு விட்டால் நம்மை தேவனிடத்தில் இருந்து பிரிக்கும் பாவங்கள் நம்மை மேற்கொள்ளாது.தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். (1 யோவான் 3 : 9). தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவான் 5 : 4). அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள் (1 யோவான் 2 : 29).

### கிறிஸ்துவில் வளர்ப்பதற்கான அடையாளம்

சாதாரணமாக எப்படி புதிதாய் பிறந்த குழந்தைகளின் சாயலானது வளர வளர பெற்றோர்களின் சாயலாகவே மாறிப் போகிறதோ அது போல தான் ஆவிக்குரிய பிறப்பிலும் நாம் தேவ சாயலாக இருக்கிறோம். நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும் (எபேசி 3 : 15) அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார் (எபேசி 4 : 15). இது வாழ்நாள் முழுவதுமான பயணம் மறுபடியும் பிறந்தல் என்பது மிகப்பெரிய ஆசீர்வாதம் ■

# கேள்வி ? பதில்!

### யோவான் 3 : 5ல் சொல்லப்பட்டுள்ள ஜலத்தினால் பிறத்தல் என்பது என்ன?

யோவான் 3ல் இயேசு மறுபிறப்பு குறித்து நிக்கொதேமுவிடம் பேசிக் கொண்டிருக்கையில் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்கிறார். இறையியல் வல்லுநர்கள் பலவிதமாக இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அர்த்தத்தை போதிக்கிறார்கள். ஒருவன் மறுபடியும் தன் தாயின் கர்ப்பத்தில் இருந்து பிறக்க கூடுமோ? என்று நிக்கொதேமு இயேசுவிடம் கூறியதன் பின்பு தான் இயேசு இதனை தெரிவிக்கிறார்.

3 விதமான விளக்கங்களை பார்க்கலாம்.

**1. மாம்சீக பிறப்பு**: ஜலத்தினால் பிறத்தல் என்பது மாம்ச பிறப்பை குறிக்கிறது. அதாவது (பனிக்குட நீர்) சூழ்ந்த தாயின் கருவறையில் இருந்து குழந்தை பிறக்கும் மாம்ச பிறப்பு அது. இரண்டாவது பரிசுத்த ஆவியினால் பிறக்கும் ஆவிக்குரிய பிறப்பு. மேலும் மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் இயேசுவின் இந்த வார்த்தை இரண்டு விதமாக பிறப்பையும் சரியாக வரையறுக்கிறது

**2. சுத்தகரிப்பின் அடையாளம்**

வேதாகமத்தில் தண்ணீர் என்று சொல்லப்படும் காரியங்கள் குறிப்பது சுத்தப்படுத்துதல் தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், (எபேசி 5 : 26) வார்த்தையினால் இயேசுகிறிஸ்து சுத்தப்படுத்தினார். எசே36 : 25-27 சொல்கிறது உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்;நீங்கள் சுத்தமாவீர்கள். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவான் 3 : 5). நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்(யோவான் 15 : 3). உங்களில் சிலர் இப்படிப்பட்ட வர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக் கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (1கொரி 6 : 11).

**3.ஞானஸ்நானத்தை குறித்து தவறாக போதித்தல்**

மூன்றாவது பார்வை ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுவது இரட்சிப்புக்கு அவசியம். ஆனால் இது மனுஷனுடைய கிரியையே அல்ல. மாறாக இது தேவனுடைய அனுக்கிரகம். வேதத்தின் அடிப்படையில் உள்ளான மனுஷனை சோதிக்கும் பொருட்டு வெளிப்புறமான மனுஷனுக்கு கிடைக்கும் அங்கீகாரமே ஞானஸ்நானம். ஞானஸ்நானம் பெறாத கள்வனை கர்த்தர் இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய் என்று சொல்லியதை நான் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

# இரட்சிப்புக்கான 5 படிகள்

ஆவிக்குரிய பிறப்பு என்பது ஆத்துமாவிலே தேவன் செய்கிற மாற்றம்.இது நம்மால் கூடாது. எனினும் சில காரியங்களை நாம் சரியாக செய்யும்போது தான் ஆச்சரியமான அந்த மாற்றத்தை நம்மால் பெற முடியும். இரட்சிப்பு கர்த்தருடையது (யோனா 2 : 9)

**சுவிசேஷத்தை கேள்**

விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.ரோமர் 10 : 17

**இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசியுங்கள்**

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3 : 16

**தேவனை அழையுங்கள்**

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.ரோமர் 10 : 13

**அறிக்கையிடு**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை யிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் ள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1 : 9

**பாவ மன்னிப்பு**

உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். அப்போ 3 : 19

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY




பரிசேயராகிய நிக்கொதேமுவைக் குறித்து யோவான் நற்செய்தியில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. இந்த சம்பவத்தின் மூலம் மூன்று முக்கிய தகவல்களை காணலாம்

1. ஆவிக்குரிய மறுபிறத்தலே அங்கு பிரதானமாக உள்ளது (யோவான் 3 : 1-21)
2. சனகெரிப்பின் முன்பாக,ஒரு மனுஷனுடைய செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நியாயப்பிரமாணம் சொல்கிறதா என்று கேட்டான் (யோவான் 7 : 50-51)
3. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து இயேசுவின் சரீரத்தை எடுத்து அடக்கம்பண்ணும்பொருட்டு சுகந்த வர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றினான் (யோவான் 19 : 38-42)




## தேவபிள்ளைகளுடைய ஆசீர்வாதம்

நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டியதாவது (எண் 6 : 23) கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.(24-26)

தேவனுடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேலர் மேல் உண்டாகும் தேவனுடைய ஆசீர்வாதம் அவருடைய உள்ளத்தின் வெளிப்பாடு. தேவன் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிக்க சித்தமாய் இருக்கிறார் .சிருஷ்டி கர்த்தரிடமிருந்து மட்டுமே உண்மையான ஆசீர்வாதங்கள் வரும். இதே ஆசீர்வாதம் இன்றும் நமக்கு தேவன் தருகிறார்.

சோதனை, பாடுகள் மத்தியில் இருதயத்திலே அழுது கொண்டிருக்கும் ஜனங்களுக்கு இரட்சிப்பு விதிவிலக்கல்ல. அது மாதிரி சமயங்கள் நம்முடைய கண்களை வானத்திற்கு நேராக ஏறெடுத்து, தேவனிடத்தில் திரும்பக் கடவோம். நம்முடைய குறைவுகளால் தேவனுடைய இருதயம் பாதிக்கப்படும். ஆவியானவருடைய மெல்லிய சத்தத்திற்கு நாம் செவி சாய்ப்போம்.

நான் உங்களை ஆசீர்வதிப்பேன். நான் உங்களை எல்லா தீமைக்கு விலக்கி பாதுகாப்பேன். என்னுடைய ஒளியினால் உனக்கு வழிகாட்டுவேன். நான் உங்கள் மேல் இரக்கமுள்ளவர். என்னுடைய சமாதானத்தினால் நிரப்புவேன்.

எப்போதுமே அவர் நம்மை நினைத்துக் கொண்டேதான் இருப்பார். நாம் தலைகுனிந்து, காயப்பட்டு சோர்ந்து போகும் போதெல்லாம் அவர் நம் தலையை உயர்த்த வல்லவராய் இருக்கிறார். ஆகவே தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்ற நாம் இந்த உலகத்திற்கு அவரை அறிவிப்போம்.

கர்த்தருடைய நாமத்தினாலே ஆரோன் இஸ்ரவேல் புத்திரரை, ஆசீர்வதித்தது போல, நாமும் கிறிஸ்துவின் அன்பினால் மற்றவர்களை தேற்ற வேண்டும். நாம் தனிமையானவர்கள் அல்ல, நாம் ஆதரவற்றோர் அல்ல, தேவனுடைய ஆசீர்வாதத்தை சுதந்திரத்துக் கொள்ள பாத்திரவான்களாக மாறுவோம்.

அளவற்ற அவருடைய அன்பை பிரஸ்தாபமாக்குவோம். இருளான சமயங்களில் அவரால் நம்மை தேற்ற முடியும். கிறிஸ்துவின் ஒளியில் நடக்கும் போது அவருடைய இரக்கத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியும் ■

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316